05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

# படிவம் 3 மாணவர்களின் பேச்சுத் திறனைக் ஜான் டூயி கோட்பாட்டின் வழி மேம்படுத்துதல் ஓர் ஆய்வு

**Meningkatkan kemahiran bertutur pelajar Tingkatan 3 melalui Teori John Dewey**

**வினுஷா த/பெ அன்பழகன்**

**VINUSHA A/P ANBALAGAN**

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

**விரிவுரையாளர்:**

**முனைவர் பிராங்க்ளின் தம்பி ஜோஸ்**

**DR FRANKLIN THAMBI JOSE**

**சுல்தான் இட்ரிஸ் கல்வியியல் பல்கலைக்கழகம்**

**UNIVERSITI PENDIDIKAN SULTAN IDRIS**

**2024/2025**

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

**படைப்புரிமை உறுதிமொழி**

**PERAKUAN KEASLIAN PENULISAN**

இந்த உறுதிமொழி **15 / 01/ 2025** அன்று வழங்கப்பட்டது.

Perakuan ini telah dibuat pada seperti tarikh di atas,

i. மாணவர் உறுதிமொழி (Perakuan Pelajar)

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

தமிழ்மொழிக் கல்வியியல் இளங்கலைப் பட்டதிற்காக மேற்கொள்ளப்பட்ட 'படிவம் 3 மாணவர்களின் பேச்சுத் திறனைக் ஜான் டூயி கோட்பாட்டின் வழி மேம்படுத்துதல் ஓர் ஆய்வு' எனும் தலைப்பிலான இந்த ஆய்வேடு, என்னுடைய சுய முயற்சியால் உருவாக்கப்பட்டது என மொழி மற்றும் தொடர்புப் புலத்தின் மாணவியாகிய நான், வினுஷா அன்பழகன் (D20211100693) உறுதிமொழி வழங்குகிறேன். இந்த ஆய்வில், பதிப்புரிமையுடைய படைப்புகள் யாவும் அனுமதி பெறப்பட்டு, அவற்றின் மூலங்களைக் குறிப்பிட்டதோடு, துணைபுரிந்த அனைத்து மேற்கோள்களும் துணைநூற்பட்டியலில் முறையாகவும் தெளிவாகவும் எழுதப்பட்டுள்ளன.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



Saya, VINUSHA ANBALAGAN (D20211100693) merupakan pelajar Fakulti Bahasa dan Komunikasi dengan ini mengaku bahawa projek penyelidikan yang bertajuk ‘Meningkatkan kemahiran bertutur pelajar Tingkatan 3 melalui Teori John Dewey’ adalah hasil kerja sendiri. Saya tidak memplagiat dan menggunakan mana-mana hasıl kerja yang mengandungi hak cipta bagi tujuan rujukan dalam kajian ini dan segala rujukan yang digunakan juga telah ditulis mengikut garis panduan yang tepat. Apa-apa petikan, ekstrak, rujukan atau pengeluaran semula daripada atau kepada mana- mana hasil yang mengandungi hak cipta telah dinyatakan dengan sejelasnya dan secukupnya.

மாணவர் கையொப்பம் / Tandatangan Pelajar

**ii. நெறியாளர் உறுதிமொழி (Perakuan Penyelia)**

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

‘படிவம் 3 மாணவர்களின் பேச்சுத் திறனைக் ஜான் டூயி கோட்பாட்டின் வழி மேம்படுத்துதல் ஓர் ஆய்வு’ எனும் தலைப்பிலான இந்த ஆய்வேடு, வினுஷா அன்பழகள் (D20211100693) என்ற மாணவியின் முயற்சியால் உருவாக்கப்பட்டது என ஆய்வு நெறியாளராகிய நான், முனைவர் பிராங்க்ளின் தம்பி ஜோஸ் உறுதிமொழி வழங்குகிறேன். இந்த ஆய்வேடு தமிழ்மொழிக் கல்வியியல் இளங்கலைப் பட்டத்தைப் பெறுவதற்கான ஒரு பகுதியை நிறைவுச் செய்ய மொழி மற்றும் தொடர்புப் புலத்திடம் சமர்ப்பிக்கப்பட்டது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



Saya, DR. FRANKLIN THAMBI JOSE dengan ini mengesahkan bahawa hasil kerja VINUSHA ANBALAGAN (D20211100693) yang bertajuk 'Meningkatkan kemahiran bertutur pelajar Tingkatan 3 melalui Teori John Dewey' dihasilkan oleh pelajar seperti mana di atas, dan telah diserahkan kepada Fakulti Bahasa dan Komunikasi bagi memenuhi sebahagian syarat untuk memperoleh Ijazah Sarjana Muda Pendidikan (Bahasa Tamil) dengan kepujian.

Tandatangan,

______________________________

**Dr. Franklin Thambi Jose**
Penyelia,
Fakulti Bahasa dan Komunikasi,
Universiti Pendidikan Sultan Idris.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



# படிவம் 3 மாணவர்களின் பேச்சுத் திறனைக் ஜான் டூயி கோட்பாட்டின் வழி மேம்படுத்துதல் ஓர் ஆய்வு

## ஆய்வுச் சுருக்கம்

தமிழ்மொழிக் கற்றல் கற்பித்தலில் இடைநிலைப்பள்ளி மாணவர்களின் பேசுத்திறனை மேம்படுத்த ஜான் டூயிவின் கோட்பாட்டின் பயன்பாட்டை இந்த ஆய்வு ஆராய்கிறது. ஜான் டூயிவின் கோட்பாடான செயல்வழிக் கற்றல் மூலம் கற்றல் மாணவர் மைய கற்பித்தல் பேச்சுத்திறனை மேம்படுத்த உதவுகின்றது. இந்த ஆய்வு இரண்டு நோக்கங்களை அடைவதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ளது. முதல் நோக்கம், படிவம் 3 மாணவர்களின் பேச்சுத்திறனில் ஏற்படும் சிக்கலைக் கண்டறிதல். இரண்டாவது நோக்கம், படிவம் 3 மாணவர்களின் பேச்சுத்திறனில் ஏற்படும் சிக்கல்களை ஜான் டூயி கோட்பாட்டின் வழி மேம்படுத்துதல். பினாங்கு மாநிலத்தில் உள்ள கொன்வன் பட்டவர்ட் இடைநிலைப்பள்ளியில் தமிழ்மொழி பாடம் பயிலும் 23 படிவம் 3 மாணவிகள் மற்றும் 4 ஆசிரியர்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட தரவுகளை, கல ஆய்வு அணுகுமுறையைப் பயன்படுத்தி இந்த ஆய்வு நடத்தப்பட்டது. தரவுகளைச் சேகரிக்க நேர்காணல், முன்னறித் தேர்வு, பின்னறித் தேர்வு, மற்றும் உற்று நோக்குதல் மேற்கொள்ளப்பட்டன. முன்னறித் தேர்வுக்குப் பிறகு, மாணவர்களின் பேச்சுத்திறனை மேம்படுத்துவதற்காக 4 நடவடிக்கைகள் திட்டமிட்டு நடத்தப்பட்டன. அவை, Minimal Pair Practice, Role-Play, WH Questioning, and Learning Trios A-B-C. குறிப்பாக, இடைநிலைப்பள்ளி மாணவர்களுக்கான தமிழ்மொழிக் கல்வித் திட்டத்தின் பின்னணியில் டூயிவின் கொள்கைகளை எவ்வாறு செயல்படுத்த முடியும் என்பதை இவ்வாய்வு ஆராய்ந்துள்ளது. மேலும், மாணவர்களின் உச்சரிப்புப் பிழை, சொற்களஞ்சிய குறைப்பாடு, பிறமொழிக் கலப்பு, திறம்படப் பேசுதல் மேம்பட்டுள்ளன. இறுதியாக, மாணவர்களிடையே பேச்சுத்திறனில் குறிப்பிடத்தக்க வளர்ச்சி உள்ளது என்பதை பின்னறித் தேர்வு முடிவு உறுதிப்படுத்தியுள்ளது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


**MENINGKATKAN KEMAHIRAN BERTUTUR PELAJAR TINGKATAN 3 MELALUI TEORI JOHN DEWEY**

## ABSTRAK

Kajian ini meneroka aplikasi teori pendidikan John Dewey untuk mengembangkan kemahiran lisan para pelajar sekolah menengah dalam pembelajaran bahasa Tamil. Penekanan Dewey terhadap pembelajaran melalui pengalaman, pengajaran berpusatkan pelajar, dan kaedah berasaskan penyelidikan menawarkan rangka kerja yang berharga untuk meningkatkan kebolehan komunikasi lisan. Kajian ini telah dijalankan untuk mencapai dua objektif. Objektif pertama adalah mengenal pasti masalah yang dihadapi oleh pelajar Tingkatan 3 dalam kemahiran lisan. Objektif kedua adalah untuk meningkatkan kemahiran lisan pelajar Tingkatan 3 melalui teori Pembelajaran melalui Pengalaman John Dewey. Penyelidikan ini dijalankan menggunakan pendekatan campuran, dengan data kuantitatif dan kualitatif dikumpulkan daripada 23 pelajar perempuan Tingkatan 3 dan 4 guru dari Sekolah Menengah Convent Butterworth di Butterworth, Pulau Pinang. Instrumen yang digunakan untuk mengumpul data termasuk ujian awal, ujian selepas aktiviti, temu bual, dan pemerhatian. Selepas ujian awal, penyelidik melaksanakan 4 aktiviti iaitu Minimal Pair Practice, Role-Play, WH Questioning, and Learning Trios A-B-C untuk meningkatkan kemahiran lisan para pelajar. Secara khusus, penyelidikan ini menyiasat bagaimana prinsip-prinsip Dewey dapat dilaksanakan dalam konteks program pendidikan bahasa Tamil untuk pelajar sekolah menengah dan meningkatkan kelancaran, keyakinan, dan pemikiran kritis pelajar dalam komunikasi. Secara keseluruhannya, hasil ujian menekankan bahawa terdapat pertumbuhan yang ketara dalam kemahiran bercakap di kalangan pelajar.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


## பொருளடக்கம்


**இயல் 1**

1.1 **முன்னுரை** ....................................1

1.2 **ஆய்வுப் பின்னணி** ....................................3

1.3 **ஆய்வுச் சிக்கல்** ....................................7

1.4 **ஆய்வு நோக்கம்** .................................... 12

1.5 **ஆய்வு வினாக்கள்** .................................... 12

1.6 **ஆய்வு நன்மைகள்** .................................... 13

1.6.1 மாணவர்கள் .................................... 13

1.6.2 ஆசிரியர்கள் ....................................15

1.6.3 கல்வி அமைச்சு .................................... 16

1.6.4 சமுதாயம் .................................... 17

1.7 **ஆய்வு எல்லை** .................................... 18

1.8 **ஆய்வுச் சான்றாதாரம்** .................................... 19

1.8.1 முதன்மைச் சான்றாதாரம் ....................................19

1.8.2 துணைச் சான்றாதாரம் .................................... 19

1.9 **கலைச்சொற்கள் விளக்கம்** .................................... 20

**படம் 1:** ஜான் டூயிவின் 'செயல்வழிக் கற்றல்' கோட்பாடு.................... 24

1.10 **தொகுப்புரை** ....................................29

**இயல் 2** ....................................**30**

2.1 **முன்னுரை** .................................... 31

2.2 **கோட்பாடுக் கட்டமைப்பின் விவாதம்** .................................... 31

2.3 **பேச்சுத்திறன் மற்றும் ஜான் டூயிவின் செயல்வழிக் கற்றல் கோட்பாடுத் தொடர்பான முந்தைய ஆய்வுகள்** .................................... 33

2.4 **தொகுப்புரை** .................................... 46

**இயல் 3** ....................................**46**

3.1 **முன்னுரை** ....................................46

3.2 **ஆய்வு வடிவமைப்பு** .................................... 46

3.2.1 மீட்டுணர்தல் (முன்னறித் தேர்வு) .................................... 48

3.2.2 நடவடிக்கைகள் திட்டமிடுதல் .................................... 48


05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



3.2.3 செயல்படுத்துதல் .................................... 49
3.2.4 உற்று நோக்குதல் .................................... 50
3.2.5 மீட்டுணர்தல் (பின்னறித் தேர்வு) .................................... 50
**வரைப்படம் 1:** ஆய்வு வடிவமைப்பு ....................................51
3.3 **ஆய்வுக் கட்டமைப்பு** ....................................52
**வரைப்படம் 2:** ஆய்வுக் கட்டமைப்பு....................................52
3.4 **ஆய்வு அணுகுமுறை** .................................... 53
3.5 **தரவுச் சேகரிப்பு முறை** ....................................53
3.6 **தரவுப் பகுப்பாய்வு** ....................................56
**அட்டவணை 1:** மூன்றாம் படிவ மாணவர்களின் பேச்சுத்திறனின் அடைவுநிலை .................................... 56
3.7 **ஆய்வுக் கோட்பாடு** ....................................57
**படம் 2:** ஜான் டூயிவின் 'செயல்வழிக் கற்றல்' கோட்பாடு .................... 59
3.8 **கோட்பாடுக் கட்டமைப்பு** ....................................61
**வரைப்படம் 3:** கோட்பாடுக் கட்டமைப்பு .................................... 61
3.9 **ஆய்வு நடைமுறை** .................................... 61
3.10 **தொகுப்புரை** ....................................62

**இயல் 4 ....................................63**
4.1 **முன்னுரை** .................................... 63
4.2 **ஆய்வுப் பகுப்பாய்வு** .................................... 64
4.3 **ஆய்வு மாதிரிகள் பின்னணி** .................................... 65
**அட்டவணை 2:** ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டோர் பின்னணி ................65
4.4 **படிவம் மூன்று மாணவர்களின் பேச்சுத்திறனில் ஏற்படும் சிக்கல்களைக் கண்டறிதல்** .................................... 66
4.4.1 நேர்காணல் பகுப்பாய்வு .................................... 66
4.4.2 முன்னறித் தேர்வு .................................... 80
4.4.3 முன்னறித் தேர்வுக் கேள்வி .................................... 81
**அட்டவணை 3:** முன்னறித் தேர்வுக் கேள்வி .................................... 81
4.4.4 முன்னறித் தேர்வு முடிவுகள் .................................... 82
**அட்டவணை 4:** ஆய்விற்கு உட்படுத்தப்பட்டோரின் முன்னறித் தேர்வு முடிவுகள் .................................... 83
**அட்டவணை 5:** கண்டறியப்பட்ட சிக்கல்கள் .................................... 84

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



4.5 **படிவம் மூன்று மாணவர்களின் பேச்சுத்திறனில் ஏற்படும் சிக்கல்களை ஜான் டுயி கோட்பாட்டின் வழி மேம்படுதல்** ........................................................................ 85

4.5.1 திட்டமிட்டு நடத்தப்பட்ட நடவடிக்கைகள் ................................ 86

4.5.2 பின்னறித் தேர்வு ............................................................ 89

**அட்டவணை 6:** பின்னறித் தேர்வுக் கேள்வி ........................................ 89

4.5.3 பின்னறித் தேர்வு முடிவுகள் ................................................ 90

**அட்டவணை 7:** ஆய்விற்கு உட்படுத்தப்பட்டோரின் பின்னறித் தேர்வு முடிவுகள் ........................................................................ 90

4.6 **ஒப்பீடு** ........................................................................ 92

**குறிவரைப்படம் 1:** முன்னறி மற்றும் பின்னறித் தேர்வு ஒப்பீடு .......... 92

**அட்டவணை 8:** முன்னறி மற்றும் பின்னறித் தேர்வு முடிவுகளின் ஒப்பீடு ........................................................................ 93

4.7 **தொகுப்புரை** ........................................................................ 94

**இயல் 5** ........................................................................ **95**

5.1 **முன்னுரை** ........................................................................ 95

5.2 **ஆய்வு முடிவு** ........................................................................ 95

5.3 **கருத்துரை** ........................................................................ 97

5.4 **பரிந்துரை** ........................................................................ 98

5.5 **தொடராய்வுத் தலைப்புகள் பரிந்துரை** ........................................ 100

5.6 **முடிவுரை** ........................................................................ 101

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



# இயல் 1

## ஆய்வு அறிமுகம்

### 1.1 முன்னுரை

உலகலாவிய நிலையில் சுமார் 7000 மொழிகள் மக்களால் பேசப்பட்டிருந்தாலும், ஒரு மொழியின் சிறப்பை மிகத் துள்ளியமாக அறிந்து, ஆளுவதற்கும் மொழித்திறன்கள் அவசியம். இதனை மலேசியத் தமிழ்மொழிக் கலைத்திட்டமானது தமிழ்மொழி வாயிலாகப் பிறருடன் தங்களின் கருத்து அல்லது எண்ணங்களைப் பரிமாற்றம் செய்வதற்கும் தொடர்புக் கொள்ளவும் வெளிப்படுத்தும் நோக்கமாகக் கொண்டுள்ள அடிப்படை மொழித்திறனான கேட்டல், பேச்சு, வாசிப்பு, எழுத்து ஆகியவற்றோடு செய்யுள் மற்றும் இலக்கணக் கூறுகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்நான்கு அடிப்படை மொழித்திறன்களில் பேச்சுத்திறன் வகுப்பறைக் கற்றல் கற்பித்தலில் முதன்மையானது என்று வலியுறுத்தும் வண்ணமே தமிழ்மொழிக் கலைத்திட்டதில் பேச்சித்திறனையும் அதன் கூறுகளையும் முதன்மையாக இணைத்து விளக்கப்பட்டுள்ளன. அவை, செவிமடுத்தவற்றைக் கூறுவர்;

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


அதற்கேற்ப துலங்குவர், கேள்விகள் கேட்பர், திறம்படப் பேசுவர், விவரித்துக் கூறுவர், கருத்துரைப்பர்; முடிவு கூறுவர். ஆகவே, மாணவர்கள் அதன் கூறுகளை நன்கு பொருளுணர்ந்து பேச்சுத்திறனைப் பெறுவதற்கு ஆசிரியரின் பங்கும் முக்கியமானது. இந்த 21-ஆம் நூற்றாண்டுக் காலக்கட்டத்தில், கல்வி அமைச்சு மாணவர் மையக் கல்விக்கு முக்கியத்துவம் வழங்கும் வகையிலே கல்வித் திட்டங்களை வரையறுத்துள்ளனர். ஆக, ஆசிரியர்கள் தகவல் தொழில்நுட்பங்கள், விளையாட்டு முறைகளுடன் அழிவை எதிர்நோக்கிக் கொண்டிருக்கும் பல ஆய்வாளர்கள் அல்லது தத்துவஞானிகளின் கோட்பாடுகள் இணைத்துக் கற்றல் கற்பித்தலை மேற்கொள்ளலாம். இவ்வியலில் ஆய்வுப் பின்னணி, ஆய்வுச் சிக்கல், ஆய்வு நோக்கம், ஆய்வு வினா, ஆய்வு நன்மைகள், ஆய்வு எல்லை, ஆய்வுச் சான்றாதாரம், கலைச்சொற்கள் விளக்கம் ஆகியவை விளக்கப்பட்டுள்ளன.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



## 1.2 ஆய்வுப் பின்னணி

மலேசிய நாடு ஆங்கிலேயேரின் ஆட்சிக் காலத்திற்குப் பின்னர், 1960-ஆம் ஆண்டு அன்றையக் கல்வியமைச்சர் டத்தோ ஹாஜி அப்துல் ரசாக் பின் டத்தோ ஹூசேன் தலைமையில் கல்விக்குழுவால் வெளியிடப்பட்டு அமலாக்கப்பட்ட ரகுமான் தாலிப் அறிக்கை தமிழ்மொழியைப் பள்ளிகளில் பயிற்றுமொழியாகவும் ஏற்றுக்கொள்வதாக வலியுறுத்தியது. இருப்பினும், 1912-இல் ஆங்கிலேயர் செயற்படுத்திய (Labour Ordinance) தொழிலாளர் சட்டம், 7 முதல் 14 வயதுள்ள 10 பிள்ளைகள் இருப்பின், அத்தோட்ட நிர்வாகம் கட்டாயமாகப் பள்ளியை நிறுவ வேண்டும் என வலியுறுத்தித் தமிழ்ப்பள்ளிகளின் வளர்ச்சிக்குப் பெறும் உறுதுணையாக அமைத்தது. இதனால், 1920-இல் தொடங்கி தற்போது வரையிலும் இருநூறுக்கும் மேற்பட்டத் தமிழ்ப்பள்ளிகள் நிறுவப்பட்டுள்ளன (Paramasivam Maruthai, 2023).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

அன்று தொடங்கி, 21-ஆம் நூற்றாண்டில் உலக அளவிலான சவால்களை எதிர்கொள்ள, மலேசியக் கல்வி வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 2013-2025 (KPM 2013) புத்தாக்கம் சிந்தனைத்திறன் கொண்ட

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



மாணவர்களை உருவாக்குவது அரசாங்கத்தின் நோக்கமானது. அந்த வகையில் மலேசியக் கல்வி அமைச்சுத் தமிழ்மொழிக் கலைத்திட்டத்தில் மொழித்திறன்களைக் கற்றல் கற்பித்தலின் முக்கியக் கூறாக அறிமுகப்படுத்தியது. தொடக்கப்பள்ளி மற்றும் இடைநிலைப்பள்ளி மாணவர்களிடையே இத்திறன்களை மேம்படுத்தும் நோக்கிலேயே எந்தவொரு பாடத்திட்டங்களும் அமைய வேண்டும் என்பதற்காக மலேசியக் கல்வி அமைச்சு, கேட்டல்-பேச்சு, வாசிப்பு மற்றும் எழுத்துத்திறனுக்கு முக்கியத்துவம் அளித்துள்ளது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

தமிழ்மொழிக் கற்றல் கற்பித்தலில் பேச்சுத்திறனுக்கு மிகவும் முக்கியமான பங்கு உண்டு என்பதால் இம்மொழித்திறன்களில் முதன்மையாக வலியுறுத்தப்பட்டுள்ள திறனாகக் கேட்டல்-பேச்சு அமைந்துள்ளது. மாணவர்களுக்கு வீட்டிலேயே பேச்சு அறிமுகம் செய்யப்படுகிறது. ஒரு சொல்லைப் பேசத் தொடங்கி, பிறகு இருச்சொல், சொற்றொடர், வாக்கியம் எனப் பேசுகிறார்கள். படிவம் ஒன்று தொடங்கி படிவம் ஐந்து இடைநிலைப்பள்ளி மாணவர்களுக்குப் பேச்சுத்திறன் கற்றல் கற்பித்தலுக்காகப் பல்வேறு எழுத்து, இலக்கியப் படைப்புகளை

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



வரையறுக்கப்பட்டுள்ளக் கருப்பொருளுடன் இணைத்து மேற்கொள்ளப்படுகின்றது. காட்டாக, நன்னெறிக் கதைகள், சிறுகதை, பாடல், கவிதை, கட்டுரைகள் போன்ற சிறந்த எழுத்தாளர்கள், கவிஞர்கள், அறிஞர்களின் படைப்புகளில் ஒரு சில பகுதிப் பாடநூலில் அமைந்துள்ளன. படைப்புகள் ஆகும். அனைத்துப் படைப்புகளும் மாணவர்களின் வயதிற்கும் அனுபவத்திற்கும் ஏற்புடையதாக இருப்பின் மட்டுமே கல்வி அமைச்சு அதனைக் கற்றல் கற்பித்தலில் இணைக்கவும் கற்பிக்கவும் அனுமதி வழங்கியுள்ளது. படிவம் ஒன்று தொடங்கி படிவம் ஐந்து முடிவில் தமிழ்மொழிக் கலைத்திட்டத்தில் குறிப்பிட்டுள்ள 24 கருப்பொருளையும் கொண்டு இடைநிலைப்பள்ளி மாணவர்கள் தங்களின் பேச்சுத்திறனைக் கட்டாயமாக மேற்கொண்டிருப்பர். இருப்பினும், பெரும்பாலான படிவம் மூன்று மாணவர்கள் தாங்கள் கேட்கும் செய்திகளையும் தனது எண்ணங்களையும் கருத்துகளையும் பேச்சு வாயிலாக வெளியேற்றத் தயங்குகின்றனர். இதனால், அம்மாணவர்களிடையே உச்சரிப்புப் பிழை, சொற்களஞ்சியப் பிழை, பிறமொழிக் கலப்பு, திறம்படப் பேசுவதில் சிரமம், போன்றவைக் காணப்படுக்கின்றன.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



இக்காலக்கட்டத்தில் மாணவர்கள், உலக வளர்ச்சிக்கு ஏற்ப மாணவர்களும் கற்றல் கற்பித்தலில் புத்தாக்கங்கள் நிறைந்த பாடத்திட்டத்தையே விரும்புகின்றனர். தத்துவஞானி ஜான் டூயி என்பவர் பாரம்பரியக் கல்விக்கு எதிராக அமைந்திருப்பதை வலியுறுத்துவதற்காகச் செயல்வழிக் கற்றல் (Learning by doing) என்ற இக்கோட்பாட்டினை அறிமுகப்படுத்தியுள்ளார். இக்கோட்பாடு, ஒரு நடவடிக்கையில் உள்ள செயல்முறைகளையும் அதில் பெறுகின்ற அனுபவத்தைக் கொண்டும் அறிவை வளர்ப்பதாகும் (Mazuki Mohd Yasim, 2011). மாணவர்கள் ஈடுபடும் நடவடிக்கைகள் மூலம் எதிர்நோக்கும் சிக்கல்களின் தூண்டுகோலில் சிந்தனைத்திறன்களை நன்கு மெருகூட்டுவது மட்டுமின்றி சிக்கல்களைக் களையும் வல்லமையும் வாழ்நாள் கல்வியாகவும் உருவாகும் (Tu Shiwan & Zhukai, 2023). எனவே, இவ்வாய்வுப் படிவம் மூன்று மாணவர்களின் பேச்சுத்திறனை ஜான் டூயி கோட்பாட்டின் வழி மேம்படுத்த மேற்கொள்ளப்பட்டது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


### 1.3 ஆய்வுச் சிக்கல்

மலேசியக் கல்வி அமைச்சகம் தர அடிப்படையிலான மதிப்பீடு ஆவணத்தில் (DSKP) பேச்சுத்திறன் கீழ் ஐந்து கற்றல் தரங்கள் மற்றும் மாணவர்களின் பேச்சுத்திறனை மதிப்பீடுச் செய்வதற்கான தர அடைவுநிலையையும் அறிமுகப்படுத்தியுள்ளது. இவை, மாணவர்களுக்குத் தாங்கும் வலிமையையும் தொடர்புக் கொள்ளும் திறனையும் மேம்படுத்துவதற்கு இந்த 21-ஆம் நூற்றாண்டுக் கலைத்திட்டம், தொடக்கப்பள்ளியில் தொடங்கி இடைநிலைப்பள்ளி வரையிலும் அமலாக்கப்படுத்தப்பட்டு வருகின்றது. இருப்பினும், பேச்சுத்திறனில் படிவம் 3 மாணவர்கள் பல சிக்கல்களை எதிர்நோக்குகின்றனர். மாணவர்களுக்குப் பேச்சுத்திறனில் வல்லமைக் குன்றி இருப்பதினால் உச்சரிப்புப் பிழைகள், பிறமொழிக் கலப்புகள், சொற்களஞ்சியப் பிழை, திறம்படப் பேசுவதில் சிரமம் போன்ற சிக்கல்களை எதிர்நோக்குகின்றனர்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

தொடக்கமாக, உச்சரிப்புப் பிழை மாணவர்களின் வாசிப்பிலிருந்து தொடங்குகின்றது. மாணவர்கள் சரியான உச்சரிப்புடன் வாசிக்கப் பழக்கத் தவறுவதல் குறில் நெடில் வேற்றுமைகள் அறியாது லகர, ழகர, ளகர

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


வேறுபாடுகளையும் ரகர, றகர வேறுபாடுகளையும் ணகர, நகர, னகர வேறுபாடுகளையும் சரியாக உச்சரிக்காமல் அதனைப் பேச்சும் பொழுதும் பின்தொடர்கின்றனர். உச்சரிப்புப் பிழை ஒரு சொல்லின் பொருளையே மாற்றியமைக்கும் வல்லமைப்படைத்துள்ளது (Uma Allaghery, 2021). இதனால், கூற வரும் கருத்து அல்லது தகவல் பிறருக்குத் தவறாகச் சேருவதோடுக் கருத்துப் பரிமாற்றங்களில் சிக்கல்களை எதிர்நோக்குவார்கள்.

அடுத்து, சொற்களஞ்சியம் எனப்படுவது சொற்களை வரிசைப்படுத்தித் தருவது என்ற குறுகிய நோக்கில் அமையாமல் சொற்களின் வலைபோல் பின்னிக்கிடக்கும் பொருண்மை உறவுகளையும் சொல் உறவுகளையும் வெளிப்படுத்த வேண்டும் என்ற நோக்கில் அமைப்பாக்கம் செய்யப்பட்டிருக்கும் (Rajendran Sankaravelayuthan, 2018). சொற்களஞ்சியம், நிகண்டுகள், அகராதிகளின் துணைக் கொண்டு அமைக்கப்பட்டவையாக இருப்பினும் தமிழில் வழங்கிலுள்ள எல்லாச் சொற்களும், குறிப்பாகத் தற்காலத் தமிழக்குத் தேவையான சொற்கள் நிகண்டுகளில் இல்லாததால், அதன் குறைபாட்டைப் போக்கவே தமிழில் சொற்களஞ்சியம் உருவாக்கப்பட்டது. இச்சொற்களஞ்சியத்தைப் பற்றிய விழிப்புணர்வும்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


பயன்பாடும் மாணவர்களிடன் குறைவாகவே காணப்படுகின்றது. அவர்களுக்குப் பாடநூல்களில் உள்ள சொற்களஞ்சியங்களை மட்டுமே கற்றுக்கொள்கின்றனர். ஆசிரியர் ஒரு பனுவல் அல்லது ஒரு பாடம் தொடர்பான சொற்களஞ்சியங்களை எடுத்துரைக்கும் பொழுதும் அதன் பொருளை மாணவர்களிடமிருந்து பெறுவதற்கு முயலும் பொழுதும் மாணவர்கள் அதனைக் கற்றுக் கொள்கின்றனர் (Uma Allaghery, 2021). அதனைத் தவிர அவர்கள் சுயமாகக் கற்றுக் கொள்ள விரும்புவதில்லை. இதனால், மாணவர்கள் பேச்சில் சொற்களஞ்சியங்களைப் பயன்படுத்தும் பொழுது பிழைகள், பொருட்பிழைகள், தங்கள் கருத்துக்களைச் சரியாக வெளிப்படுத்தச் சிக்கல் ஏற்படுகின்றது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

இதனைத் தொடர்த்து, பிறமொழிக் கலப்பிற்கு முதன்மையான காரணியாகத் திகழ்வது வீட்டுப் பின்னணியாகக் கருதப்படுகின்றது. மாணவர்கள் தற்காலத்தில் பன்மொழிச் சூழலில் முதன்மையாக ஆங்கிலமும் மலாய் மொழியும் அமைந்துள்ளன. ஆகையால், பெரும்பாலான தமிழ் மாணவர்களின் இல்லங்களில் ஆங்கிலமே முதன்மை மொழியாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. அதன் ஆதிக்கம் படிவம் 3 மாணவர்களின்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


மத்தியில் தாய்மொழியின் பயன்பாட்டை வெகுவாகக் குறைத்து, அவர்களின் மொழியாற்றலையும் குறைக்கும் (கேணுகோபால், 2011). ஏனென்றால், ஆங்கில மொழிப் புழக்கத்தில் இருக்கும் பொழுது, மாணவர்கள் தமிழில் பேசும் பொழுது, சிரமத்தை எதிர்கொள்வது மட்டுமில்லாமல் ஒரு சொற்றொடரைக் கூறுவதற்குள் பல ஆங்கில மொழி சொற்களைப் பயன்படுத்துவர். பெரும்பாலான சமயங்களில் இரண்டாம் மொழிகளைக் கற்றுக் கொள்ளும் போது முதலாம் மொழியின் தாக்கம் இயல்பாகவே இருக்கும். ஒரு மொழிக்கு இருநிலை வழக்கு இருக்கும் பொழுது அம்மொழியைக் கற்கும் பொழுது அந்த மொழியின் பேச்சு வழக்கின் தாக்கம் அமைந்திருக்கும். ஏனென்றால், இருநிலை வழக்கு மொழிகளில் இரண்டு வழக்குகளுக்கு இடையே உள்ள வேறுபாடு அதிகமாக இருக்கும் (Kingston, 2016. ப. 43). இந்நிலைத் தமிழ்மொழியில் உயர்வழக்கு, தாழ்வழக்கு என்ற இருநிலைகள் உள்ளதால் மாணவர்கள் பேச்சும் பொழுது ஒலியனியல் பிழைகள் அதிகம் ஏற்படுகின்றது. ஆக, இச்சிக்கலை மாணவர்கள் தமிழ்ச் சொற்களைச் சரியாகப் பயன்படுத்தாமலும் அதனை வாய்மொழியாகப் பகிரவோ வெளிப்படுத்தவோ முயலும் பொழுது சிரமத்தை எதிர்கொள்கின்றனர்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi
05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



மேலும், திறம்படப் பேசுவது படிவம் மூன்று மாணவர்களிடம் காணப்படும் ஒரு சிக்கலாகும். இதற்கு முக்கிய காரணம், மாணவர்கள் தங்கள் கருத்துக்களை மற்ற மாணவர்கள் முன் பகிருவதில் தயக்கப்படுதின்றனர் எனலாம் (Kementerian Pendidikan Malaysia, 2017). பெரும்பாலும் மாணவர்களைப் பாடநூலில் உள்ள பாடங்களை மட்டுமே வகுப்பில் கலந்துரையாடிப் பின் அதனை வகுப்பில் ஒப்பிக்கும் வண்ணமே நடைபெறுகின்றது. சில பள்ளி ஆசிரியர்கள் மாணவர்களின் கேள்விகளுக்குப் பதில் அளிக்கத் தடுமாறுவதினால், மாணவர்களின் தன்னம்பிக்கையைச் சிதைக்கும் வண்ணம் தேவையற்றக் கேள்விகள் எனக் கூறி தவிர்க்கின்றனர். இதனால், தாழ்வு மனப்பான்மை மாணவர்களிடம் உருவெடுத்துத் தங்களின் பதில் தவறாக இருக்கும் எனும் எண்ணத்திலேயே வகுப்பில் கலந்து பேசுவது இல்லை (Uma Allaghery, 2018). இது மாணவர்கள் கருத்துக்களைய் பகிரவும் தகவல்களை உய்துணர்ந்து ஆராய்ந்து பேசுவதில் சிரமத்தையும் தங்களின் இடர்களையும் ஏடல்களையும் வெளிப்படுத்தும் பொழுதுப் பேச்சில் தடுமாற்றங்களும் தயங்கங்களும் ஏதிர்நோக்க நேரிடும். இச்சிக்கலைக்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



களைவதற்கு ஆய்வாளர் ஜான் டூயிவின் செயல்வழிக் கற்றல் (Learning by doing) எனும் கோட்பாட்டின் வழி இவ்வாய்வை மேற்கொண்டார்.

## 1.4 ஆய்வு நோக்கம்

இந்த ஆய்வு இரண்டு நோக்கங்களை அடைவதைக் கருத்தில் கொண்டு மேற்கொள்ளப்பட்டது. அவை;

1.4.1 படிவம் 3 மாணவர்களின் பேச்சுத்திறனில் ஏற்படும் சிக்கலைக் கண்டறிதல்.

1.4.2 படிவம் 3 மாணவர்களின் பேச்சுத்திறனில் ஏற்படும் சிக்கல்களை ஜான் டூயி கோட்பாட்டின் வழி மேம்படுத்துதல்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

## 1.5 ஆய்வு வினாக்கள்

1.5.1 படிவம் 3 மாணவர்களின் பேச்சுத்திறனில் எதிர்நோக்கும் சிக்கல்கள் யாவை?

1.5.2 படிவம் 3 மாணவர்களின் பேச்சுத்திறனில் ஏற்படும் சிக்கல்களை ஜான் டூயி கோட்பாட்டின் வழி எவ்வாறு மேம்படுத்தலாம்?

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


## 1.6 ஆய்வு நன்மைகள்

இந்த ஆய்வுப் பல தரப்பினருக்கு நன்மை பயக்கும் வகையில் அமையும். மாணவர்கள், ஆசிரியர்கள், கல்வி அமைச்சு, சமுதாயத்திற்குப் பயன்பெரும் வண்ணம் அமையும்.

### 1.6.1 மாணவர்கள்

இவ்வாய்வில் ஆய்வாளர் பயன்படுத்திருக்கும் ஜான் டூயிவின் செயல்வழிக் கற்றல் (Learning by doing) கோட்பாடுப் படிவம் 3 மாணவர்களுக்குப் பேச்சுத்திறனில் பெரும் பங்காற்றும். தொடக்கமாக, மாணவர்களின் பேச்சில் வல்லமை அதிகரிக்கும். ஜான் டூயிவின் கோட்பாடு மாணவர்கள் முதல் முறையாகப் பேச்சுத் தொடர்புடைய நடவடிக்கையில் ஈடுபடும் பொழுது, தாங்கள் செய்யும் உச்சரிப்புப் பிழைகளையும் மொழிக் கலப்புகளையும் அறிந்து கொள்ளவர். பின், அந்த அனுபவத்தைக் மாணவர்கள் அடுத்த நடவடிக்கையில் பயன்படுத்துவர். மாணவர்களின் பிழைகள் அடுத்தடுத்த நடவடிக்கையில் சுயமாகக் குறைத்துக் கொண்டே வருவார்கள். இதனால், பேச்சுத்திறனின் மேம்பாட்டிற்கு மிக முக்கியமாகக் கருதப்படும் சொல்லாண்மை வலுவடைந்து உச்சரிப்புப் பிழைகள் குறையும். அதுமட்டுமில்லாமல், தொடர்ந்து அனைத்து நடவடிக்கைகளிலும்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi
05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


தமிழ்மொழியையும் அந்நடவடிக்கையின் கருப்பொருள் தொடர்பான சொற்களஞ்சியங்களைப் பயன்படுத்தி வரும் பொழுது, படிவம் 3 மாணவர்களின் பேச்சில் மொழிக் கலப்புகளைப் படிப்படியாகக் குறைக்கும் முயற்சியைக் காணலாம். மேலும், சொற்களஞ்சியங்களின் பயன்பாட்டினை அதிகரிக்கலாம்.

தொடர்ந்து, மாணவர்கள் திறம்படப் பேசு பழக்கப்படுவர். ஒவ்வொரு பேச்சுத் தொடர்புடைய நடவடிக்கையில் தங்களை ஈடுபடுத்திக் கொள்ளும் பொழுது மாணவர்கள், பல்வேறுப் பேச்சு நடவடிக்கையில் பெற்ற அந்த அனுபவத்தை வேறு புதியச் செயலில் அல்லது நடவடிக்கையில் அமல்படுத்தும் பொழுது அவர்களின் தயக்கம் குறைந்து தன்னம்பிக்கை அதிகரிக்கும். இதனால், அவர்களால் ஒரு செய்தியை அல்லது தகவலை நன்கு பகுப்பாய்வுச் செய்து விவரித்துக் கூறவும், ஒன்றைச் சரியாக நிரல்படுத்திக் கூறவும், ஒரு செய்தியை நன்கு உணர்ந்து அதனை விளக்கிக் கூறவும் முற்படுவார்கள். அவர்களின் பேச்சில் எந்தொரு தடுமாற்றங்களும் இல்லாமல் கூற வரும் கருத்தைப் பிறரிடம் சரியாகப் பரிமாற்றம் செய்வார்கள். பின், மாணவர்களின் வகுப்பில் ஈடுபாடு அதிகரிக்கும்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi
05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


படிவம் 3 மாணவர்கள் இன்னும் இளையப் பருவத்தில் இருப்பதினால் விளையாட்டு, நடவடிக்கையை நடத்தும் போது, அவர்கள் ஆர்வத்துடன் தங்களின் முழு பங்களிப்பை வழங்குவர் என்பது திண்ணம்.

### 1.6.2 ஆசிரியர்கள்

ஆசிரியர்களுக்கும் இவ்வாய்வு நன்மை தரும் வகையில் அமைந்துள்ளது. ஒவ்வொரு ஆசிரியர்களும் கற்றல் கற்பித்தலில் பேச்சுத்திறனின் முக்கியத்துவத்தைக் கட்டாயமாக அறிந்திருப்பர். தமிழாசிரியர்கள் இந்தச் செயல்வழிக் கற்றல் எனும் கோட்பாட்டைப் பயன்படுத்தி மாணவர்களுக்குப் பல பேச்சுத் தொடர்புடைய நடவடிக்கைகளை நடத்துவதன் மூலம் மாணவர்களின் பேச்சுத்திறன் சிக்கல்களைச் சுலபமாகக் கையாளலாம். ஆசிரியர்களும் கரும்பலகையே பயன்படுத்திப் போதிப்பதைக் குறைத்துவிட்டு மாணவர் மையக் கல்வியாக வகுப்பை நடத்தலாம். செய்வழிக் கற்றல் கற்பித்தலை நடத்தும் போது, மாணவர்களை ஈர்க்கும் வகையிலும் புரியும் வகையிலும் அமையும். அதுமட்டுமல்லாமல், ஆசிரியர் மாணவர்களை எஸ்.பி.எம் தேர்வுக்குத் தயார்ச் செய்ய எளிமையாக இருப்பதோடு மாணவர்கள் சிறப்பாகத்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



தேர்ச்சிப் பெறவும் வழிவகுக்கும். மேலும், பள்ளியில் மட்டுமின்றி அன்றாட வாழ்விலும் தங்களின் கருத்துகளைச் சரியாக வெளிப்படுத்தவும் ஏடல்களைச் சரியான முறையில் எழுப்பவும் மாணவர்கள் சுயமாகப் புரியும் வகையில் எளிமையாகக் கற்றுக்கொள்ள ஆசிரியர் உறுதுணையாக இருக்க வழிவகுக்கும். ஆக, ஆசிரியர்களுக்கு இக்கோட்பாடு ஒரு புதிய கற்றல் கற்பித்தல் சூழலை அமைத்துக் கொடுக்கும்.

### 1.6.3 கல்வி அமைச்சு

கல்வி அமைச்சுக்கும் பயன்மிக்க வழியில் இந்த ஆய்வு உதவி செய்யும். மலேசியக் கல்வி அமைச்சுத் திட்டத்தின் கீழ் படிவம் 3 இறுதி தேர்வில் மற்றும் படிவம் ஐந்தில் மாணவர்கள் எஸ்.பி.எம் தேர்வில் நடைப்பெறவிற்கும் வாய்மொழித் தேர்வில் (speaking test) அனைத்து மாணவர்களும் கட்டாயமாகப் பங்கேற்க வேண்டும். இதற்கு மாணவர்களைத் தயார்ச் செய்யும் பொருட்டே பேச்சுத்திறனில் ஐந்து முக்கியக் கற்றல் தரங்கள் கலைத்திட்டத்தில் இணைக்கப்பட்டுள்ளன. அதனை வழிக்காட்டியாகக் கொண்டே ஆசிரியர்கள் படிவம் 3 தொடங்கிப் பேச்சுத்திறனுக்கு அழுத்தம் தரத் தொடங்குகின்றனர். இந்த ஆய்வில்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் அனைத்தும் படிவம் 3 மாணவர்களின் பேச்சில் வளத்தை அதிகரித்து மொழியின் ஆளுமையைப் பெறச் செய்யும். மாணவர்கள் வாய்மொழித் தேர்வில் நன்றாகப் பங்கேற்றுச் சிறந்த தேர்ச்சியைப் பெறுவர். ஆகையால், கல்வி அமைச்சு வகுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ்மொழிப் பாடத்திட்டத்தின் விழுக்காடு உயர்ந்து வெற்றிக் காண உதவும்.

### 1.6.4 சமுதாயம்

இவ்வாய்வுக் கல்விசார் துறைகளுக்கு மட்டும் பயனாக அமையாமல், நமது சமுதாயத்திற்கும் நல்ல விளைபயனை வழங்க இயலும் என்பதை உறுதிப்படுத்த முடியும். மலேசியக் கலைத்திட்டம், மாணவர்கள் சமுதாயத் தொடர்பினை மேம்படுத்தவும் தகவல்களைச் சரியாகப் பெற்று முறையாகக் கையாளவும் தங்களின் எண்ணங்களையும் கருத்துகளையும் ஏரணச் சிந்தனையோடு விளைபயன்மிக்க வகையில் வெளிப்படுத்தவதைத் தமிழ்மொழிக் கலைதிட்டத்தின் குறியிலக்காகக் குறிப்பிட்டுள்ளது. ஆகையால், இவ்வாய்வு மாணவர்கள் தங்களின் பேச்சுத்திறனைக் கொண்டு ஒரு விளைபயன்மிக்கத் தொடர்பாடலைச்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



சுற்றார்களுடன் மேற்கொள்ள உதவும். இதனால், சமுதாயத்தில் எழக்கூடியப் பல அவலங்களைத் தவிர்த்துச் சுமூகமான வாழ்வை வாழ வழிக்காட்டும். அதுமட்டுமின்றி, தங்களது ஏடல்களை முரண்களையும் எவ்வாறு சரியான முறையிலும் மற்றவர்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தாமல் நற்சொற்களைப் பயன்படுத்திப் பண்புடன் தொடர்பாடலாம் அல்லது வெளிப்படுத்தலாம் என்பதை அறிந்து கொள்ளும் முன்னோடியாகக் இந்த அய்வு நடத்திப்படுகின்றது. ஆகையால், இது ஒழுக்கமும் பண்பும் உள்ளச் சமுதாயத்தை உருவாக்க உதவும்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

## 1.7 ஆய்வு எல்லை

பினாங்கு மாநிலத்திலுள்ளப் பட்டவர்ட் வட்டாரத்தில் 25-க்கு மேற்பட்ட இடைநிலைப்பள்ளிகள் அமைந்துள்ளன. இப்பள்ளிகளை ஒப்பிடுகையில், ஆய்வாளர் கொன்வன் பட்டவர்ட் இடைநிலைப்பள்ளியில் உள்ள படிவம் 3 மாணவர்களிடையே பேச்சுத்திறனில் சிக்கல்கள் அதிகம் காணப்படுவதைக் கண்டறிந்துள்ளார். ஆகவே, இப்பள்ளியை ஆய்வு எல்லையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இவ்வாய்விற்கு படிவம் 3 பயிலும் 23 தமிழ்மொழிப் பாட மாணவர்களும் 4 ஆசிரியர்களும் ஆய்விற்கு

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


உட்படுத்தப்படவுள்ளார்கள். ஆய்விற்கு உட்படுத்தப்பட்ட 23 மாணவர்களும் பெண் மாணவிகள் ஆவர்.

## 1.8 ஆய்வுச் சான்றாதாரம்

இந்த ஆய்வின் நோக்கத்தை முழுமைப்பெறுவதற்குப் பல மூலங்களிலிருந்து தரவுகள் சேகரிக்கப்படும். அந்த வகையில் தகவல்களைப் பெறுவதற்கு முதன்மைச் சான்றாதாரம், துணைச் சான்றாதாரம் என இரு வகையான சான்றாதாரங்கள் பயன்படுத்தப்பட்டது. அவை, கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

### 1.8.1 முதன்மைச் சான்றாதாரம்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

முதன்மைச் சான்றாதாரமாக, கொன்வன் பட்டவர்ட் இடைநிலைப்பள்ளியின் 4 ஆசிரியர்களின் நேர்காணல்கள், 23 படிவம் 3 மாணவர்கள் பாடத்தின் போது பங்கேற்கும் ஒலிப்பதிவு இவ்வாய்விற்குப் பயன்படுத்தப்பட்டது.

### 1.8.2 துணைச் சான்றாதாரம்

அடுத்து, துணைச் சான்றாதாரமாகப் படிவம் மூன்றுக்கான மலேசியக் கல்வி அமைச்சுத் தர அடிப்படையிலான மதிப்பீடு ஆவணம் (DSKP),

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


இணைய வழிப் பெற்ற ஆய்வுத் தொடர்பான கட்டுரைகள், புத்தகங்கள், ஆய்வேடுகள் பயன்படுத்தப்பட்டன.

**1.9 கலைச்சொற்கள் விளக்கம்**

இந்த ஆய்வின் தலைப்பானது படிவம் 3 மாணவர்களின் பேச்சுத்திறனைக் ஜான் டூயி கோட்பாட்டின் வழி மேம்படுத்துதல் ஓர் ஆய்வு என்பதாகும். இத்தலைப்பில் படிவம் 3, பேச்சுத்திறன், ஜான் டூயி கோட்பாடுக் கலைச்சொற்களாகத் திகழ்கின்றன. அவை, தொடர்ந்து விளக்கப்பட்டுள்ளன.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

**1.9.1 பேச்சுத்திறன்**

அடிப்படையில் மொழித்திறன்களில் பேச்சுத்திறன் ஒருவருக்கு அடிப்படையாக அமைத்திருக்கும் ஓர் ஆளுமையாகும். *'personality'* என அழைக்கப்படும் ஆளுமைத்திறன் மேம்பாட்டிற்கு உடல்வளமும் உளவளமும் எத்தனை இன்றியமையாதது. அதுபோன்று, பேச்சுத்திறனில் செல்வாக்குப் பெறுவது மிகவும் முக்கியமாகும் (Sagar Narayanan, 2021). பேச்சுத்திறன் என்பது ஒருவர் தனது அன்றாட வாழ்வில் கிடைக்கப்பெறும் தகவல்களைச் சீர்தூக்கிப்பார்த்து, குறிப்பிட்டத் துறையைச் சார்ந்த ஏடல்களைச் சூழலுக்கு ஏற்பத் தரமான மொழியில் எந்தொரு

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



தடுமாற்றங்கள் இன்றி பிறருக்குப் புரியும் வகையில் வெளிப்படுத்துவதாகும். பேச்சின்வழி ஏடல், கருத்துக்கோடல் ஆகியவற்றைப் புரிந்துகொண்டு முக்கியக் கருத்துகளை அடையாளம் காண்பர்; புதிய ஏடல்களையும் கருத்துக்களையும் தங்களது தேவைகளையும் தெளிவாக வெளியிடுவர். இத்திறனைக் கொண்டு மாணவர்கள் கவிதைகளையும் செய்யுள்களையும் வாசித்துத் தெளிவாகப் பொருள் கூறவும் பேச்சு, உரை ஆகியவற்றை உய்த்துணரும் திறன் பெறுவர். அதனை அடுத்து, தங்களின் உச்சரிப்புப் பிழைகளைக் குறைப்பதோடுச் சொற்களஞ்சியங்களை அறிந்து எடுத்தாளுகின்ற திறன் மேம்பட்டுப் பேச்சாளுமை மிக்கவராகத் திகழச் செய்வதாகும்.

அடுத்து, ஒருவரின் குணத்தைப் பிரதிபளிப்பதும் அவரின் பேச்சுத்திறனாகும். ஏனென்றால், ஒருவரின் உள்ளத்தை வெளிப்படுத்த எளிதான வழி பேசுவதுதான். ஒருவர் சிறந்த பேச்சுத்திறன் கொண்டவர் அனைவராலும் விரும்பப்படுவார் அல்லது போற்றப்படுவார். அதுமட்டுமின்றி, அவர்களின் கருத்துகள் மற்றவர்களால் ஏற்கும் வகையில் அமையும். அதற்கு மாறாக இருப்பவர்கள் தங்களின் பேச்சாற்றல்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


அல்லாதவராகவும் பண்பற்ற சொற்களைப் பயன்பத்திப் பிறரைப் பாதிப்பவராகவே சித்தறிக்கிறார். ஆகையால், ஒரு சூழ்நிலைப் பின்னணியை அறிந்து பேசுதல், ஒரு கருத்தை வழங்குவதற்கு முன் மிகவும் சரியாகச் சிந்தித்துச் சொற்களைப் பயன்படுத்தல், விவாதத்தில் ஈடுபடும் பொழுது நன்றாக உணர்ந்து நாகரீகமாகவும் ஒழுக்கமாகவும் கருத்தை முன் வந்தல், உறுதியில்லாத கருத்து அல்லது தகவல்களைத் தவிர்த்தல், மற்றவர் பேசும் போது அதனைச் செவிமடுத்தல் போன்ற கூறுகளைப் பின்பற்றினால் ஒரு சிறந்த பேச்சாளுமையைக் கொண்டிருக்கலாம். இந்தக் கூறுகளுக்கு முக்கியத்துவம் வழங்குவதன் வழி மாணவர்களைப் பேச்சுத்திறனை மேம்படுத்தலாம்.

### 1.9.2 படிவம் 3

இடைநிலைப்பள்ளி எனப்படுவது இரண்டாம் நிலைக் கல்வியாகும். அதாவது, ஏழு வயது தொடங்கி பன்னிரெண்டு வயது வரை தனது தொடக்கக்கல்வியை நிறைவுச் செய்த பின்னர் தொடர்கின்ற கல்வியாகும். மலேசியக் கல்வித் திட்டத்தின்படி, 5 அல்லது 6 ஆண்டுகள் மட்டுமே இடைநிலைப்பள்ளியில் பயில்வார்கள். தொடக்கப்பள்ளியின் இறுதி

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



தேர்வில் தேர்ச்சிப் பெறாத 13 வயதுடைய மாணவர்கள் புகுமுக வகுப்பிற்கும், தேர்ச்சிப் பெற்ற 13 வயதுடைய மாணவர்கள் படிவம் 1-கும் சேர்க்கப்படுவார்கள். 14 வயதுடைய மாணவர்கள் படிவம் 2-லும், 15 வயதுடைய மாணவர்கள் படிவம் 3-லும், 16 வயதுடைய மாணவர்கள் படிவம் 4-லும், 17 வயதுடைய மாணவர்கள் படிவம் 5-லும் பயில்வர். புகுமுக வகுப்புப் பயின்ற மாணவர்கள் தொடர்ந்து படிவம் 1 முதல் படிவம் 5 வரை தொடர்ந்து பயில்வார்கள். இவர்களது வயது மற்ற மாணவர்களைக் காட்டிலும் ஒரு வயது கூடுதலாக இருக்கும்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

தொடர்ந்து, ஒவ்வொரு படிவத்திற்கும் வெவ்வெறு பாடத்திட்டங்களும் பாடநூல்களும் வரையறுக்கப்பட்டுள்ளன. படிவம் 3 மாணவர்கள் 15 வயதுடையவர்களாக இருப்பதினால், அவர்களின் வயது, அனுபவம், சிந்தனை ஆற்றலுக்கு ஏற்ப கற்றல் கற்பித்தல் நடைபெறும். இப்படிவம் மாணவர்களுக்குக் கேட்டல்-பேச்சு, வாசிப்பு, எழுத்து எனும் நான்கு முதன்மை மொழித்திறன்களுடன் செய்யுள் மொழியணி, இலக்கணம் ஆகியவைக் கற்பிக்கப்படும். ஒரு வாரத்தில் 4 மொழித்திறன்கள் 2 மணி நேரங்களுக்குக் கற்பிக்கப்படும். படிவம் மூன்று


05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



மாணவர்களின் கற்றல் கற்பித்தல், போக்குவரத்து, வரலாறு, சுற்றுச்சூழல், கலை, பண்பாடு, இலக்கியம், பாதுகாப்பு, தகவல் தொடர்புத் தொழில் நுட்பம், மொழி, மனிதவள மேம்பாடு, விளையாட்டு, சமூகவியல், வணிகவியல், பயனீட்டாளர் கல்வி, உணவு, அறிவியல், போன்ற கருப்பொருளின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றது.

### 1.9.3 ஜான் டூயி கோட்பாடு (செயல்வழிக் கற்றல்)




**படம் 1: ஜான் டூயிவின் 'செயல்வழிக் கற்றல்' கோட்பாடு**

மேற்காணும் படம் 1-இல் காணப்படும் வரைப்படம் செயல்வழிக் கற்றல் (Learning by doing) எனும் கோட்பாட்டின் கூறுகளாகும். இது அமெரிக்க தத்துவஞானி, உளவியலாளர் மற்றும் கல்வி சீர்திருத்தவாதி, கல்வியில் மிகவும் செல்வாக்கு மிக்க சிந்தனையாளர்களில் ஒருவராகப் பரவலாக

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



அங்கீகரிக்கப்பட்டவரான ஜான் டூயி என்பவரால் உருவாக்கப்பட்டக் கோட்பாடாகும். இக்கோட்பாடுக் கல்வியைப் பற்றிய அவரது புதுமையான யோசனைகள் அனுபவக் கற்றல் என்ற கருத்தை மையமாகக் கொண்டிருந்தன. அவர் ஆசிரியர் மையக் கல்விக்கு முரணாக இருப்பவர் என்பதனைச் 'சொற்பொழிவுகளைச் செயலற்ற முறையில் கேட்பது அல்லது உண்மைகளை மனப்பாடம் செய்வதைக் காட்டிலும் செயலில் ஈடுபடுவதன் மூலம் நாம் சிறப்பாகக் கற்றுக்கொள்ள முடியும்' எனக் கூறி உணர்த்தியுள்ளார் (*John Dewey's* theory, 2023).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

தொடர்ந்து, ஜான் டூயிக்குக் கல்வி என்பது தத்துவார்த்த அறிவைப் பெறுவது மட்டுமல்ல, நடைமுறை அனுபவத்தைப் பெறுவதும் ஆகும். அவர் கல்வியை ஒரு முழுமையான கண்ணோட்டத்தில் பார்த்தார், கற்றல் என்பது ஒரு தொடர்ச்சியான செயல்முறையாகக் கருதப்படுகிறது, இது அறிவை வாழ்க்கை அனுபவங்களுடன் இணைக்கிறது மற்றும் உறுதியான முடிவுகளுடன் சிந்தனைத்திறன்களை ஒருங்கிணைக்க மாணவர்களை ஊக்குவிக்கிறது. இந்த வகையான கற்பித்தல், விமர்சன சிந்தனையையும், உலகிற்கு வலிமையான திறன்களை எடுத்துச்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



செல்லவும் கூடிய மாணவரை வடிவமைக்க உதவும் என்று அவர் நம்பினார். ஜான் டூயிவின் கல்வித் தத்துவம், அனுபவக் கல்விக்குக் குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் கொடுத்துச் ‘செயல்வழிக் கற்றல்’ என்ற கருத்தை வலியுறுத்துகிறது. செயல்வழிக் கற்றல் எனப்படுவது மாணவர்கள் பாடத்தொடர்புடையச் செயல்கள் அல்லது நடவடிக்கைகளில் மாணவர்கள் ஆசிரியரின் துணையின்றிச் சுயமாக ஈடுபடுவார்கள். அதன்வழி, அவர்கள் பெறும் அனுபவங்களைக் கொண்டு, இதற்கு ஏற்புடைய மற்றொரு புதிய நடவடிக்கைகளில் இந்த அனுவத்தை இணைத்து அமல்படுத்திக் கற்றுத் தங்களின் திறனை மேம்படுத்திக் கொள்வதாகும் (John Dewey’s theory, 2023). எடுத்துக்காட்டாக, ஒரு மாணவர் வாதம் செய்தல் என்ற முதல் நடவடிக்கையில் ஈடுபடுதல். பின்னர், கருத்து அல்லது சொற்பிழைகள், பயன்படுத்தப்படும் சொற்களஞ்சியங்கள், வாதம் செய்யும் முறைகள் போன்றவற்றில் ஏற்படும் குறைநிறைகளின் வழி பெறும் அனுபவங்களை நன்கு பகுப்பாய்வுச் செய்து, தனது வாழ்வோடுத் தொடர்புப்படுத்த முயல்வர். தொடர்புப்படுத்தியப் பின்னர், புதிதாகக் கற்ற இந்த அனுபவத்தை மற்றொரு புதிய செயல் அல்லது பாடத் தொடர்புடைய நடவடிக்கையில் பயன்படுத்தி முயற்சி

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



செய்வார். அதாவது, அடுத்த வாதம் அல்லது விவாத வகுப்பில் நடைப்பெறும் பொழுது அதனைப் பயன்படுத்துவர்.

படம் 1-இல் காணப்படும் வரைப்படம் கீழ் விளக்கப்பட்டுள்ளது;

1. **அனுபவம் (Experience)**

- மாணவர்கள் பாடத் தொடர்பான நடவடிக்கையில் ஈடுபடுதல்.

2. **பகிர்தல் (Share)**

- கிடைத்த எதிர்வினைகளையும் நடத்தவற்றைப் பிரதிபலிக்கும் வகையில் சிந்திப்பர்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

3. **செயல்முறை (Process)**

- கிடைத்த அனுபவங்களைக் கொண்டு எவ்வாறு அந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது என்பதைப் பகுப்பாய்வுச் செய்வர்.

4. **பொதுமைப்படுத்துதல் (Generalize)**

- நடவடிக்கைக்கு வாழ்வியல் திறனுக்கும் உள்ள இந்தத் தொடர்பினைக் கண்டறிவர்.

**அல்லது**

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



- முந்தைய அனுபத்தையும் புதிய பாடத் தொடர்பான நடவடிக்கை நடத்தப்படும் பொழுது தொடர்புப்படுத்துதல்.

5. **செயல்படுத்துதல் (Apply)**

- முந்தைய நடவடிக்கையில் கிடைத்த அனுபவத்தையும் திறனையும் அன்றாட வாழ்வில் தொடர்புப்படுத்திப் பயன்படுத்துவர்.

**அல்லது**

- கிடைத்தத் திறனை அல்லது அனுபவத்தைப் புதிய நடவடிக்கையில் தொடர்புப்படுத்திச் செயல்படுத்துதல்.

எனவே, இக்கோட்பாடு விளைபயன்மிக்க வகையில் மாணவர்கள் பேச்சுத்திறனை மேம்படுத்த உதவும். நடத்தப்படும் ஒவ்வொரு நடவடிக்கையின் வழி இக்கோட்பாட்டின் தனித்தன்மையும் மகத்துவதும் மாணவர்களின் பேச்சில் காணப்படும் சிக்கல்களைக் களையச் செய்து மெருகூட்டும்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


## 1.10 தொகுப்புரை

இந்த இயலில் ஆய்வைப் பற்றிய மேலோட்டமான தகவல்கள் விளக்கப்பட்டுள்ளன. ஆய்வாளர் ஆய்வுப் பின்னணியில் ஆய்வுத் தலைப்பைப் பற்றியப் பொதுவான விளக்கம் அளித்துள்ளார். இவ்வாய்வின் நோக்கங்களையும் வினாக்களையும் கொண்டு அமைந்துள்ளது. இவ்வாய்வினால் மாணவர்கள், ஆசிரியர்கள், சமுதாயம், கல்வி அமைச்சு போன்றவர்கள் நன்மையடைவார்கள். மேலும், இவ்வாய்விற்குத் தேர்ந்தெடுக்கவிற்கும் எல்லை, ஆய்வுச் சிக்கல்கள், ஆய்வுச் சான்றாதாரம், கலைச்சொற்களின் விளக்கம் போன்றவைக்கு இவ்வியலில் விளக்கமளிக்கப்பட்டுள்ளன.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi